843 கால்நடை மருத்துவர்களை நியமித்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலேகூட எங்கும் கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தவுடனேயே 843 கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்தியது எல்லோருக்கும் தெரியும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செக்காரப்பட்டி கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்மூலம் ஆய்வு செய்து, தேவைப்படுமானால் அங்கு ஒரு கால்நடை மருத்துவரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நியமிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

ஆயத்த ஆடை

***37271—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

2013 அக்டோபர் 30]

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள சுந்தரபாண்டிபுரம், இராமச்சந்திராபுரம், டபிள்யு.புதுப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகள் கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இங்கு செயல்பட்டு வந்த கூட்டுறவு நூற்பாலை தற்பொழுது மூடப்பட்டுள்ளதால் இங்கே பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மேலும், இங்கே படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பற்று வெளிமாநிலங்களிலும், வெளிமாவட்டங்களிலும் சென்று பணியாற்றுகின்றனர். வெளிமாவட்டங்களில் சென்று பணிபுரியும் இளம் பெண்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். தற்போது, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தனியார் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனங்களால் தயார் செய்யப்படும் சுடிதார், நைட்டி, பெட்டிகோட், பாவாடை, சட்டை, பேன்ட் போன்றவை சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறது. எனவே, இங்குள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களின் எதிர்கால நலனைக் கருதி, உள்ளூரிலேயே வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை ஒன்றினை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்கும்பொருட்டு, சர்வதேசத் தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கின்ற 71 ஜவுளிப் பூங்காக்களில் தமிழகத்தில் மட்டும் 10 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு, ரூ.1,066.45 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு வருடத்திற்கு 12,183 கோடி ரூபாய்க்கான ஜவுளி வர்த்தகமும், 1,40,000 பேருக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பும் கொடுக்கின்ற ஓர் அருமையான சூழ்நிலையும் தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும்

திட்டம் அரசு மற்றும் தனியாரின் பங்களிப்புடன்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதற்காக, மத்திய அரசு 40 விழுக்காடு அல்லது 40 கோடி ரூபாய், இதில் எது குறைவோ அதை மானியமாகவும், மாநில அரசு 9 விழுக்காடு அல்லது 9 கோடி ரூபாய், இதில் எது குறைவோ அதை மானியமாகவும் வழங்குகின்றது. ஆகவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைப்பதற்கு, அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளி மாவட்டத்தில் வேலை செய்கின்ற மக்களுக்கும், சுடிதார் போன்ற ஆடைகளைத் தயாரிக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர்களும், இளம் பெண்களும் வேலையில்லாத காரணத்தினால், அருகிலுள்ள பஞ்சாலைகளிலும், பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகிறார்கள். அந்தத் தொழில்கள் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும் தொழில்கள். குறிப்பாக, பட்டாசுத் தொழிலில் உயிரைப் பணயம் வைத்து, தினந்தோறும் பணி செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனவே, தினந்தோறும் பணிக்குச் செல்கின்றபோது, உயிர் பயத்தோடு சென்று,*

2013 அக்டோபர் 30]

பணியாற்றுகிற படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுடைய நலனைக் கருதி, அரசு, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மக்களுடைய நலன் கருதி பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகின்ற மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுத்தி வந்து கொண்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மக்களது உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற அரசாங்கமாக சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையின் மூலமாக வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்காகவும், நெசவாளர்கள் நலன் கருதியும் பல்வேறு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் எடுக்கப்பட்டுள்ளன என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, வீடுகள் இல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக 260 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நெசவாளர்களுக்காக பசுமை வீடுகள் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஆறாயிரம் பெடல் தறிகள் ரூபாய் 24 கோடியில் கொடுத்தும், அதோடு கைத்தறி நெசவாளர்களுக்கு மிஷின்மூலம் அதிகமான சிட்டா நூல்கள் சுற்றுவதற்கு இருபத்தைந்தாயிரம் மின் ராட்டை கொடுத்தும் சிறப்பான முறையில் அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறார்கள். படித்த இளைஞர்களுக்கு சிறப்பான முறையில் வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக, ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதற்கு விருதுநகர் மாவட்ட தொழில்முனைவோர்,

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவோ அரசுக்குக் கோரிக்கை வைக்கின்றபோது, இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும். இந்தத் தொழில்மூலம் படித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

சொந்தக் கட்டடம்

***6142—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதியிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீரங்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் துறையூர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 1 கோடி ரூபாய் நிதி வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். துறையூர் தாலுகா, வடக்குவெளி கிராமம், சர்வே எண் 68/2–ல், மொத்த விஸ்தீரணம் 1.52 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டெண்டர் விடும் பணிகள் முடிந்தவுடன், மேற்படி பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.